Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 61

புதன்கிழமை
26 ஜனவரி 2022

தை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 891
மொத்தம் 6,03,654

**உயிரிழப்பு**
நேற்று 17
மொத்தம் 15,330

# தடுப்புக்களில் இருப்போர் அரசியல்கைதிகள் அல்லர்

- பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டோரே சிறையில்
- பிரச்சினைக்கு விரைவான தீர்வை பெற எதிர்பார்ப்பு
- நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 26

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை தமிழ் அரசியல் கைதிகள் எனக் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்க்கின்றோம். 15

## பூஸ்டர் டோஸ் ஏற்றியோருக்கே கச்சதீவு திருவிழாவில் அனுமதி

*இந்தியப் பக்தர்களுக்கு கதவடைப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 26

கச்சதீவு உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் பூஸ்டர் டோஸ் ஏற்றிய 500 பேரை மாத்திரமே அனுமதிப்பது என்று தீர்மா 15



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையுடன் 12 ஆண்டுகளாகியுள்ளன. அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட நேற்று முடி இறக்கி கொழும்பு முகத்துவாரம் காளி கோயிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். தனது கணவருக்கு நீதி கோரி, கடந்த 12 ஆண்டுகளாக இவர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார். (எ-இ)

**முச்சந்தி முரளி**




## திடீர் சுகவீனத்தால் 4 வயதுச் சிறுமி சாவு

யாழ்ப்பாணம், ஜன.26

திடீர் சுகவீனம் காரணமாக 4 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். பண்டத்தரிப்பு, சாந்தையைச் சேர்ந்த ரஷ்மிகா 15



## பலாலியில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.26

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அந்தோனிபுரத்தில் நேற்றுக் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. 15

## நாளைவரைக்கும் மின்வெட்டு இல்லை!

கொழும்பு, ஜன.26

நாளைவரை மின்வெட்டுக்கான அவசியம் இல்லை என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நா 15



## மஹிந்த கணக்கிலேயே கை வைத்த கில்லாடி?

*விசாரணைகள் ஆரம்பம்*

கொழும்பு, ஜன.26

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வங்கிக் கணக்கில் இருந்த பெரும் தொகைப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பில் பிரதமரின் பணிக்குழாமின் 15

## தமிழக மீனவர் 55 பேருக்கு நிபந்தனையுடன் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.26

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காகக் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 55 பேர் ஊர் 15



## பிரதமருக்கு 'ஒப்பிரேசன்'

கொழும்பு, ஜன.26

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள முன்னணி தனியார் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமரின் வாயில் 15


## கள்ள மணல் ஏற்றிய டிராக்டர் மீது சூடு!

கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.26

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் (டிராக்டர்) இராணுவத்தினரால் 15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுப் பாதுகாப்புக்கு 5 இராணுவக் காவலரண்கள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு




கிளிநொச்சி, ஜன. 26

**சட்டவிரோத மணல் அகழ்வால் இரணைமடுக் குளத்துக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கு 5 இடங்களில் இராணுவக் காவலரண்கள் அமைக் கப்படும் என கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வால் இரணைமடுக்குளத்துக்கு பெரும் ஆபத்து ஏற்படவுள்ளது. அதிகாரிகளாகிய நாங்கள் இன்று இங்கே கடமையில் இருப்போம் சில வருடங்களுக்குள் சென்று விடுவோம். ஆனால் இந்த மக்கள் இந்தப் பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருக்கப் போகின்றனர். ஆகவே இந்த சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முதற்கட்டமாக 5 இடங்களில் இராணுவக் காவலரண்களை அமைத்து, அதன் மூலம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கமக்காரர் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இடங்களை அடையாளப்படுத்தி காவலரண்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் - என்றார். (வ-214)



## வவுனியா சூடுவெந்தபுலவு இராணுவச் சாவடி அகற்றம்

வவுனியா, ஜன. 26

வவுனியா சூடுவெந்தபுலவு பிரதான வீதியில் அல் இக்பால் மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவச் சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சீரான நிலைமை நிலவுகின்ற காரணத்தால்தான் இந்தச் சோதனைச் சாவடி அகற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ய-18)

## தயா மாஸ்டர் வழக்கில் விடுவிப்பு

### ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

வவுனியா,ஜன. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் என்று அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி, வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வவுனியா மேல்நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ், சட்டமா அதிபரால், வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் மே 18ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்குத் தொடரப்பட்டது.

பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தல் விதிகளின் கீழ், தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று வவுனியா மேல் நீதிமன்றில், சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில், வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ம-4-110)

## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜன.26

45லீற்றர் கசிப்புடன் கிளிநொச்சியில் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கசிப்புடன் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட வீதிச் சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 45லீற்றர் கசிப்பும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (வ-113)

## 196.5 ஏக்கர் வயல் நிலங்கள் காட்டுயானைகளால் அழிவு

### தண்ணிமுறிப்பு விவசாயிகள் கவலை



முல்லைத்தீவு, ஜன.26

தண்ணிமுறிப்பு வயல் வெளியில் கடந்த ஆண்டு காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட 62 விவசாயிகளின் 196.5 ஏக்கர் வயல் நிலம் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன என கமநலசேவை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தின் தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் அதிகளவான விவசாயிகள் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். வயல் நிலங்களின் எல்லைப் பகுதிகளுக்கு யானை வேலி இல்லாத நிலையில் தொடர்ச்சியாக காட்டுயானைகளின் தொல்லையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

காட்டின் பகுதிகளை எல்லையாகக்கொண்ட விவசாயிகள் யானைக்கு காவல் காத்து வந்தாலும் யானைகள் தொடர்ந்தும் அழிவை ஏற்படுத்தி வருகின்றன. விவசாயி ஒருவருக்கு இரண்டு யானை வெடிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கொடுத்துள்ள போதும் யானைகள் வெடிகளுக்கு கட்டுப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-19)

## வீட்டில் தீ விபத்து சொத்துக்கள் நாசம்

கிளிநொச்சி, ஜன. 26

கிளிநொச்சி-புலோப்பளை கிழக்கில் வீடு ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து அந்த வீட்டில் இருந்த சொத்துக்கள் பலவும் எரிந்த ழிந்துள்ளன.

வீடு எரிந்துகொண்டிருந்த சமயம் பளைப் பொலிஸார் தீப் பரவலை கட்டுப்படுத்தினர். குறித்த விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-113)

## கடன் உதவி வழங்கல்

சாவகச்சேரி, ஜன.26

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரால், மன்ற அங்கத்தவர்களின் வணிக மேம்பாட்டுக்காக கடன் உதவி மக்கள் வங்கி ஊடாக வழங்கப்படவுள்ளது. கடனைப்பெற விரும்பும் அங்கத்தவர்கள், மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் தலைவர் ந.சிவபாலன் அறிவித்துள்ளார். (வ-9)

## தனியார் காணியில் மோட்டார் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.26

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளானை கிராம அலுவலர் பிரிவில், தனியார் காணியிலிருந்து நேற்று முன்தினம் மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

காணியைச் சுத்தம் செய்தபோது, சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை அவதானித்த உரிமையாளர், பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் குண்டை அடையாளப்படுத்தினர். நீதிமன்ற அனுமதியுடன், குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ம-4-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குக!

## வலி. மேற்கு பிரதேசசபையினர் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜன. 26**

**முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் மற்றும் அவர்களுடைய ஊதிய உயர்வு என்பவற்றை வலியுறுத்தி, வலி. மேற்கு பிரதேசசபைக்கு முன்பாக, சபையின் உறுப்பினர்களால் நேற்றுக்காலை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

கடந்த மாதாந்த அமர்வின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேசசபை உறுப்பினரும் முன்பள்ளி ஆசிரியருமான பன்னீர்செல்வம் நின்மதியால் முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பள உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் தொடர்பாக பிரேரணை ஒன்று முன் வைக்கப்பட்டது. இது தொடர்பில் சபையால் ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இந்த நிலையில், இதன் தொடர்ச்சியாக நேற்று மேற்படி போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது 6 ஆயிரம் ரூபா ஆறு நாளைக்குக் காணுமா?, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கு, முன் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவைக் காலத்தின் பின்னர் ஓய்வூதியம் ஒன்றுமே இல்லையா?, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தநிலை தொடரக்கூடாது, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விடிவே கிடையாதா? என்ற கோஷங்களை எழுப்பியவாறு உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-ய-125)

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்


முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணி பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் 48 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் - கருநாட்டுக்கேணி பகுதியிலுள்ள வயலுக்கு குறித்த நபர் செல்லும்போதே கட்டுத்துவக்கு வெடித்துள்ளது. இதையடுத்து காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொக்கிளாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-19)



யாழ்ப்பாண பொதுநூலகத்தின் உள்ளக வீதிகளை காப்பெற் வீதிகளாக தரம் உயர்த்தும் பணிகள் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்டன. குறித்த பணிகளை மாநகர முதல்வர் மணிவண்ணன் நேரில் சென்று பார்வையிட்டார். (ம-20)



# மானிப்பாயில் வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.26

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலக்கை பிள்ளையார் கோவில் பகுதியிலிருந்து வாள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

கோவிலின் பின்புறம் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் வாள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கஜேந்திரா வாள்கள் மற்றும் நீளமான கத்தி என்பன மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-125)




**கலியாண வீடெண்டாலும் நான்தான் மாப்பிள்ளை, செத்த வீடெண்டாலும் நான் தான் பிணம் எண்ட மாதிரி எங்கையும், எதிலையும் தன்னையும் ஒரு முக்கியமான வி.ஐ.பியாக் காட்டிக் கொள்ளுறதில எங்கட கனவு பாழானவருக்கு கடும் ஆசை. கொழும்பில இருந்து ஆரும் அமைச்சர்மார் யாழ்ப்பாணத்துக்கு வந்தால் ஆளைக் கையில பிடிக்க முடியாது. எல்லா வேலையையும் தூக்கி எறிஞ்சிட்டு, ஏதோ சுப்பர்குளு போட்டு ஒட்டின மாதிரி அவையோடு சேர்ந்து திரியிறதுதான் கனவு பாழானா எம்.பியின் முழுநேரத் தொழில். அதை மாதிரி யாழ்ப்பாணத்தில நடக்கிற எல்லா விழாக்களுக்கும் தன்னைத்தான் விருந்தினராகக் கூப்பிட வேணும் எண்டும் ஆள் ஓர்டர் போட்டிருக்கிறாராம். அப்பிடிச் செய்யாதவையை நேரம் பார்த்து காலைவாருற வேலையள் செய்யிறதிலையும் கனவு பாழானவர் விண்ணன் கண்டியளோ.**

**இப்பிடியெல்லாம் எங்கும், எதிலும்,எப்பவும் படம் காட்டுறதில கண்ணும் கருத்துமா இருக்கிற கனவு பாழான எம்.பியைப் பற்றி மேல் மட்டத்தில அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லை. அதைப்பற்றி ரண்டு, மூண்டுதரம் பட்சி கூட சொன்னது. ஆனால் தன்னை மேலிடத்தில ஆரும் மதிக்கிறேலை எண்ட விசயத்தை கனவு பாழானவர் வெளியில காட்டிக் கொள்ளுறேலை. தானும், அரசாங்கத்தில இருக்கிற அமைச்சர்மாரும் தேனும் பாலும்போல பழகிற மாதிரித்தான் காட்டிக்கொள்ளுவார். ஒருகட்டத்தில இந்த விசயம் மேலிடத்துக்கு தெரிஞ்சு "இனிமேல் இப்பிடி அமைச்சர்மார் அழைக்காட்டி வலியப் போய் ஒட்டிக்கொண்டு திரியவேண்டாம்" எண்டும் ஆளுக்கு டோஸ் குடுபட்டிருக்கு. ஆனால் அதையெல்லாம், பெரிசா எடுக்கிற ஆள் இல்லையே அவர். என்ன தான் ஒதுக்கி வைச்சாலும், நான் முன்னுக்கு வந்து நிண்டுகொண்டு முகத்தைக் காட்டியே தீருவன் எண்டு கனவுக்கார எம்.பி கடும் அலப்பறைதான். "இவருக்கு அழைப்புக் குடுத்தால் தானே வருவார். அதால இனிமேல் அவருக்கு அழைப்பும் குடுக்கக் கூடாது, அழைப்பிதழில பேரும் போடக்கூடாது" எண்டு தங்களுக்க ஒரு முடிவை மேலிடம் எடுத்திருக்காம். அதின்ர விளைவுதான், இந்தக் கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில நீதி அமைச்சின்ர நடமாடும் சேவையில நீதியமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், வடக்கின்ர ஆளுநர் ஜீவன் தியாகராஜா, மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் எண்டு நாலுபேரை மட்டும் தான் விருந்தினராப் போட்டு அழைப்பிதழ் அடிச்சிருக்கினம். ஆனால், கனவு பாழாப்போன எம்.பியின்ர பேர் அதில இல்லவே இல்லை. யாழ்ப்பாணத்து உடையார் தானே தான் எண்டு கொழும்பெல்லாம் சொல்லிக்கொண்டு திரிஞ்சவருக்கு இப்பிடி தன்ரபேர் போடாமல், நட மாடும் சேவையின்ர அழைப்பிதழ் அடிச்சது பெரும் அவமானமாப் போட்டுதாம். அரச மேலிடத்தில இருக்கிற எல்லாருக்கும் இதைப் பற்றியெல்லாம் கொம்பிளைண்ட் பண்ணியும் ஆரும் அதைக் கணக்கெடுக்கேலையாம்.**

**இவ்வளவு நடந்த பிறகும், அழைப்பிதழில பேர் போடாமல் அவமானப்படுத்தின பிறகும், எந்த வழியால போய் அமைச்சர்மாரோட ஒட்டிக் கொண்டு நிண்டு போட்டோவுக்கு போஸ் குடுக்கலாம் எண்டுதான் அவர் இன்னமும் கனவு கண்டு கொண்டு இருக்கிறாராம். இவையை என்ன செய்தாலும் திருத்த முடியாது எண்டு மேல்மட்டக்காரருக்கு விளங்கேலையே.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிக்கவும் சஜித்தும் கரம் கோர்க்கவேண்டும்

## மனோவின் ஆசை இது

**கொழும்பு, ஜன. 26**

**நாம் முன்னோக்கிச்சென்று, இந்தக் காட்டாட்சியை வீழ்த்த வேண்டும் என்றால் சஜித் பிரேமதாஸவும், சம்பிக்க ரணவக்கவும் முரண்பாடுகளை மறந்து கரம் கோர்க்க வேண்டும். இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஊழல் எதிர்ப்புக் குழு அங்கத்தவர்களை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியம் அளித்துவிட்டு, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது;

வழமையாக அரசுகள் பதவிக்கு வரும். பின்னர் அவை விழும். அதையடுத்துப் புதிய அரசு பதவிக்கு வந்து அதுவும் விழும். பின்னர் இன்னொரு அரசு ஆட்சிக்கு வரும். இதுவே வழமையாகியுள்ளது. ஆனால், இன்று அரசு விழுவதற்கு முன் நாடு விழுந்துவிட்டது. அண்டை நாடுகளிடம் கெஞ்சிக்கூத்தாடி கைமாற்று வாங்கி, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, பெருங்கடன்களின் மீள் செலுத்தும் தொகையைச் செலுத்திக் காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்து விட்டது. ஆகவே, புதிய அரசொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்பதை விட, புதிய நாடொன்றை உருவாக்க வேண்டும் என்றுதான் கூறவேண்டும். இன்று இந்த நாட்டின் அரச எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் கரம் கோர்க்க வேண்டும்.

அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், 43ஆம் படையணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் கரம் கோர்க்க வேண்டும் -என்றார். (ஒ-22)

## பைசரால் பெண்களுக்கு பாதிப்பில்லை

கொழும்பு, ஜன. 26

கொரோனாவை எதிர்க்க பைசர் தடுப்பூசி செலுத்துவதால், பாலியல் ரீதியாக பெண்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தடுப்பூசியை ஏற்றுவதால், குழந்தைப் பாக்கியம் இல்லாமல் போகும். பாலியல் ரீதியான பலவீனங்கள் ஏற்படும். மாதவிடாய் சக்கரத்தில் மாற்றம் ஏற்படும் என்று பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றில் எந்த உண்மையும் இல்லை என்றும் மருத்துவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## மலையகத்தில் கோதுமைமாவுக்கு தட்டுப்பாடு



ஹற்றன், ஜன. 26

மலையகத்தில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், தோட்டத் தொழிலாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பொகவந்தலாவ, சாமிமலை, மஸ்கெலியா, சலங்கந்த, டயகம போன்ற தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

"எமது பிரதான உணவாக கோதுமை மா இருப்பதால், சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வியாபாரிகள் கோதுமை மா கையிருப்பு முடிந்துவிட்டதாகப் பதிலளிக்கின்றனர்" என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ கோதுமை மா நிவாரணமாக வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

# பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு நாடுகளிடையே இணக்கப்பாடு

## இராணுவத் தளபதி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 26

பயங்கரவாதச் செயற்பாடுகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான போராட்டங்களுக்கு, நாடுகளுக்கு இடையே இணக்கப்பாடு அவசியம் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பயங்கரவாதம் அல்லது கூட்டு வன்முறைச் செயற்பாடுகளை எதிர்ப்பது தொடர்பில் அரசுகளால் மேற்கொள்ளப்படும் நியாயமான முயற்சிகள் தொடர்பில், தெற்காசிய பிராந்திய ரீதியிலான ஒப்பந்தமொன்றை கைசாத்திடவேண்டியது அவசியம்.

அதற்கான தீர்மானங்களை நிறுவனக் கட்டமைப்பொன்றின் கீழ் மேற்கொள்ள வேண்டியதும் அவசியம்.

சர்வதேச எல்லைகளில் பயங்கரவாதிகள் மற்றும் குற்றச் செயற்பாட்டாளர்களின் நாடு கடந்த மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிகள் என்பனவும் முக்கியமானவை.

சந்தேநக நபர்கள் தொடர்பிலான சாட்சியங்களை சேகரித்தல், தேடப்படும் நபர்கள் தொடர்பிலான தகவல்களை பரிமாற்றிக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளூடாக ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

குறிப்பிட்ட நாடுகளின் இராணுவத்தினருக்கு மாத்திரம் பயிற்சிகளை வழங்கும் முறைக்கு மாறாக, தெற்காசியப் பிராந்தியத்தின் படையினருக்கும் கூட்டுப்பயிற்சிகளை வழங்குவது அவசியமாகும்.

அண்மைய காலங்களில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான நிதி உதவிகளை வழங்கும் செயற்பாடுகளில் அதிகரிப்பைக் காணமுடிகின்றது -என்றார். (ம-4-இ)

# பைசர் தடுப்பூசிகள் ஜூலையுடன் காலாவதி

கொழும்பு, ஜன. 26

களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பைசர் தடுப்பூசிகளை, எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் பயன்படுத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அரசு பூஸ்டர் டோஸ் ஏற்றுகைக்காக 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியுள்ளது.

5 மில்லியன் தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்னமும் 9 மில்லியன் தடுப்பூசிகள் களஞ்சியசாலைகளில் எஞ்சியுள்ளன. இவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பெருந்தொகைத் தடுப்பூசிகள் காலாவதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## அதிக விலைக்கு சீமெந்து விற்பனை: விற்பனை நிலையங்களில் சோதனை

கொழும்பு, ஜன. 26

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட, அதிக விலைக்கு சீமெந்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டறிய, நுகர்வோர் விவகார அதிகார சபை நாடளாவிய ரீதியில் திடீர் சோதனைகளை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், காலி மற்றும் அம்பாந்தோட்டைமாவட்டங்களில் 56 சீமெந்து விற்பனை நிலையங்கள் இதுவரை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கையிருப்பை வைத்திருக்கும்போது, பற்றாக்குறையைக் காரணம் காட்டி, விற்பனையை மறுப்பது, பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்தல் மற்றும் இருப்புகளை மறைத்து வைப்பது உள்ளிட்டவை குற்றமாகக் கருதப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறனவர்களின் விற்பனையைத் தடை செய்ய அல்லது பறிமுதல் செய்ய நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அதிகாரம் உள்ளது. அதற்கமைவாக சட்டத்தை மீறும் விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-4-இ)

## ஜயந்தவுக்கும் கொரோனா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீரவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த வாரத்தில் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

## சபுகஸ்கந்தவின் செயற்பாடு தாமதம்

மசகு எண்ணெய் விநியோகம் தாமதிப்பதால், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை தாமதமாகும் என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் நிறுத்தப்பட்டன.

எனினும் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது மசகு எண்ணெய் விவகாரத்தால், நிலையச் செயற்பாடுகளை குறிப்பிட்ட நாளில் ஆரம்பிக்க முடியாது என்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொலிஸாருக்கு பிரிட்டன் மீண்டும் பயிற்சி!

## மனித உரிமை ஆர்வலர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 26

**இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதால், ஸ்கொட்லாந்து இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி வழங்குவதை நிறுத்தியுள்ள போதிலும், பிரிட்டன் தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளது. இதற்கு மனித உரிமை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.**

பொலிஸாரால் பாலியல் வன்முறைகள் மற்றும் மின்சார சித்திரவதைகள் அனுபவித்து இலங்கையிலிருந்து தப்பித்து ஸ்கொட்லாந்து சென்ற சிலர் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இதனையடுத்து ஸ்கொட்லாந்து பொலிஸ் கடந்த மாதம் இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி வழங்கும் ஒப்பந்தத்தை கைவிட்டது.

எனினும் பிரிட்டன் இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி வழங்கத் தயார் என்று தெரிவித்துள்ளது.

ஸ்கொட்லாந்து பயிற்சிகளை நிறுத்திக்கொண்டதன் அர்த்தம், இலங்கைப் பொலிஸாருக்கு இங்கிலாந்தின் நிதியுதவியுடனான திட்டம் எதுவும் எதிர்காலத்தில் இருக்காது என்பதல்ல என்று பிரிட்டனின் வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது. இதற்கு மனித உரிமை ஆர்வலர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தைச்சேர்ந்த பிரான்சிஸ் ஹரிசன் தெரிவிக்கையில்;

உடன்படிக்கையைத் தொடரப் போவதில்லை என்று ஸ்கொட்லாந்து அறிவித்தவேளை, ஐக்கிய இராச்சியம் இலங்கையில் இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கின்றது என்ற செய்தியையும் தெரிவித்தது.

ஆனால் இது கதவுகளை மீண்டும் திறந்துள்ளது -என்றார்.

அத்துடன் ஸ்கொட்லாந்து நாடாளுமன்றின் உறுப்பினர் மேர்சிடெஸ் விலால்பா இதனைக் கண்டித்துள்ளார்.

பிரிட்டனின் முந்தைய உதவி இலங்கையில் மனித உரிமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை.

பெருந்தொற்றின்போது அதிகரித்த மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கைகள் கிடைத்துள்ளன. இதன் காரணமாக இலங்கைப் பொலிஸாருக்கு மேலும் பயிற்சிகளை வழங்குவது குறித்து பிரிட்டன் சிந்திப்பது மன்னிக்க முடியாதது.

> **பெருந்தொற்றின் போது அதிகரித்த மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கைகள் கிடைத்துள்ளன. இதன் காரணமாக இலங்கைப் பொலிஸாருக்கு மேலும் பயிற்சிகளை வழங்குவது குறித்து பிரிட்டன் சிந்திப்பது மன்னிக்க முடியாதது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்**

இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்கொட்லாந்தின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் நிழல் சமூக அமைச்சர் மிலெஸ் பிரிக்ஸ், இது குறித்து தெளிவுபடுத்துமாறு கோரி வெளிவிவகார அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். (ம-4-இ)

## நீர் மின் உற்பத்தி விரைவில் குறைப்பு

கொழும்பு, ஜன. 26

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, நீர் மின் உற்பத்தி விரைவில் 5 வீதமாகக் குறைக்கப்படும் என்று மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் சௌமிய குமார தெரிவிக்கையில்;

அனல் மின் நிலையங்கள் முழுக் கொள்ளளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும், அது நாட்டின் 70 வீத தேவையை மட்டுமே பூர்த்தி செய்கின்றது.

மீதமுள்ள 30 வீதம் நீர் மின்சாரம், சூரியசக்தி (சோலர்) மற்றும் காற்றாலை மூலம் பெறப்படவேண்டும். நீர் மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் பெருமளவில் குறைவடைந்து வருகின்றது. இவ்வாறான நிலையில் நீர் மின் உற்பத்தி 5 வீதமாகக் குறைக்கப்படும் -என்றார். (ம-4-இ)

## கட்டணம் நிலுவையெனில் நீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, ஜன. 26

6 மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக கட்டணத்தைச் செலுத்தாதவர்களுக்கு, மாவட்ட ரீதியாக நீர் விநியோகம் துண்டிக்கப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் ஏக நாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 7 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை நீர் பாவனையாளர்கள் செலுத்தத் தவறியுள்ளனர்.

அதனால் 6 மாதங்கள் அல்லது 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவையாகவுள்ள நீர்ப்பட்டியலுக்கான, நீர் விநியோகத்தைத் துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாதாந்த குடிதண்ணீர்க் கட்டணத்தை 14 நாள்களுக்குள் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு, அடுத்த மாதப்பட்டியலில் 1.5 வீத தள்ளுபடியும், பணம் செலுத்தத் தாமதப்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்தப் பட்டியலில் 2.5 வீதம் தாமதக் கட்டணமும் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)


## பன்டோரா விவகாரம்: ரஞ்சனிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 26

சர்ச்சைக்குரிய பன்டோரா ஆவணங்கள் தொடர்பில், சிறைச்சாலையிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம், வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் அறிக்கை இறுதி செய்யப்படும் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆவணங்கள் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. ரஞ்சன் ராமநாயக்கவிடம் சட்டத்தரணிகள் மூலமாக வாக்குமூலத்தைப் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் செயலாளர் அப்சரா கால்டெரா தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய பன்டோரா ஆவணங்களில் பட்டியலிடப்பட்டுள்ள இலங்கையர்களான நிருபமா ராஜபக்ச மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோர் தொடர்பில், சாட்சியங்களை வழங்க ரஞ்சன் ராமநாயக்க தயார் என்று அவரது சட்டத்தரணி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார். (ம-4-இ)



## மீனவரின் வலையில் சிக்கிய 7 அடி முதலை

புத்தளம், ஜன. 26

முந்தல் சின்னப்பாடு வென்னப்புவல கடலில், 7 அடி நீளமான முதலையொன்று மீனவர் ஒருவரின் வலையில் சிக்கியுள்ளது.

மீனவர்கள் வலையை கரையை நோக்கி இழுத்தபோது வலை பாரமாக இருந்துள்ளது. அந்த வலைக்குள் பெரிய மீன் சிக்கியுள்ளது ஆர்வத்துடன் வலையைக் கரைசேர்த்த மீனவர்கள், அதற்குள் 7 அடி நீளமான முதலை இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதனையடுத்து, ஆனைவிழுந்தான் மற்றும் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது. வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களின் உதவியோடு முதலையைப் பாதுகாப்பாக மீட்டனர். (ம-4)


## மெழுகுவர்த்தி விற்பனை 'சூடு'

ஹற்றன், ஜன. 26

மலையகம் உட்பட நாட்டின் பெரும்பாலான நகரங்களில் மெழுகுவர்த்திகள் விற்பனை சூடு பிடித்துள்ளது. இதனால் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

சிறிய மெழுகுவர்த்தி மொத்த விலையில் 7.50 ரூபாவுக்கும், சாதாரண அளவு மெழுகுவர்த்தி 37.50 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த ஒரு மாதத்துக்குள் 100 வீதம் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சாரத் தடை அச்சம் காரணமாக, இந்த வாரத்தில் நுகர்வோர் மெழுகுவர்த்திகளை அதிகம் கொள்வனவு செய்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 26

ஒட்சிசன் தேவையுடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 8 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் கொரோனாக் கட்டுப்பாட்டுத் தலைமை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் ஒமிக்ரோனால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால், மருத்துவமனைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை 10 வீதத்தால் அதிகரித்துள்ளது. 19 மருத்துவமனைகளில் தற்போது 5 ஆயிரத்து 400 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவமனைகளின் கட்டில்கள் 40 வீதம் நிரம்பிவிட்டன. தற்போது இடநெருக்கடி இல்லாத போதிலும், சுகாதார வழிகாட்டுதல்களையும், பூஸ்டர் டோஸையும் புறக்கணித்தால் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும். கூடிய விரைவில் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்ள வேண்டும் -என்றார். (ம-4-இ)



## மின்சார வாகனங்கள் மட்டுமே இறக்குமதி?

கொழும்பு, ஜன. 26

மின்சார வாகன இறக்குமதிக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஜனாதிபதி ஆர்வம் காட்டியுள்ளார். உலகம் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில், நாங்களும் அதனை நோக்கிப் பயணிக்கின்றோம். மின்சார வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றில் முன்வைத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## சிறுவர்களுக்கு 2ஆவது டோஸ்

கொழும்பு, ஜன. 26

பைசர் தடுப்பூசியைப் பெற்ற 16 வயது முதல் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல நாடுகள் நான்கு வாரங்களுக்குப் பின்னர், இந்த வயதினருக்கு இரண்டாவது டோஸை வழங்குகின்றன. எனினும் இலங்கையில் தடுப்பூசிகள் தொடர்பான விசேட நிபுணர் குழு, மூன்று மாதங்களுக்குப் பின்னரே இரண்டாவது டோஸை வழங்கப் பரிந்துரைத்துள்ளது. அதனடிப்படையில் குறிப்பிட்ட வயதினருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்படுகின்றது. அதேவேளை பொதுமக்கள் பூஸ்டர் டோஸை விரைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் இரண்டாவது டோஸைப் பெற்று மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்தவர்கள் பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்ள முடியும். இரண்டாவது டோஸ் செலுத்தி, 6 மாதங்கள் நிறைவடைந்த போதிலும், சிலர் இன்னும் பூஸ்டர் டோஸைப் பெறவில்லை. முதல் மற்றும் இரண்டாவது டோஸ் பெற்றவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்திருக்கலாம் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்கமே பொறுப்பு

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 26

மூன்று வேளையும் சாப்பிட்டு நலமாக வாழ்ந்த மக்கள் இன்று மிகவும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர் எனவும், உரத்தைத் தடை செய்த அரசு பயிர்ச் செய்கை மேற்கொண்ட மக்களின் வருமானத்தை அழித்துள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை, முல்கிரிகல தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் மித்தெனிய தலைமை அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 'தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை தொடரும் அதேவேளை இன்று எமது நாட்டுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடும் குறைந்துள்ளது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசின் பதில் கொரோனாவே. கொரோனாப் பேரழிவின் மத்தியிலும் எழுச்சி பெற்ற நாடுகள் இருப்பதை அரசு மறந்துவிட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிக்கு வந்தவுடனேயே தொழில் அதிபர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் வரிச்சலுகை வழங்கிய அரசே இன்று ஏற்பட்ட இந்த மிகப்பெரும் வீழ்ச்சிக்குப் பொறுப்பு.

ஏறக்குறைய அனைத்து சர்வதேச நிதி மதிப்பீடுகளிலிருந்தும் நாடு அதிக ஆபத்தில் இருக்கின்றது' - என்றார். (ய-22)


## சிறுவர்களிடையே தொற்று அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 26

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில் 50க்கும் அதிகமான சிறுவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)



## பொலிஸார் மூவருக்கு கொரோனாத் தொற்று

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண் உத்தியோகத்தர்கள் இருவரும் பெண் உத்தியோகத்தர் ஒருவரும் இவ்வாறு தொற்றுக்குள்ளாகி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் கொரோனாத் தடுப்பு விடுதியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-19)

# கொரோனாவைத் தடுக்க விரிவு அறிக்கை தயார்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொரோனாத் தொற்றுப் பரவலை வெற்றிகரமாக கையாள்வதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பான விரிவான அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

12 விசேட மருத்துவர்களின் பங்களிப்புடன் தொகுக்கப்பட்ட அறிக்கை, இந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று சங்கத்தின் செயலாளரான மருத்துவர் செனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டது. தடுப்பூசித் திட்டத்தின் மூலம் இறப்பு வீதம் மற்றும் தொற்றாளர்கள் எவ்வாறு குறைக்கப்பட்டனர் உள்ளிட்ட 5 முக்கிய விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சில தனிநபர்களால் பரப்பப்பட்ட கட்டுக்கதைகளால் தடுப்பூசித் திட்டத்தில் பலர் ஆர்வத்தை இழந்துள்ளனர். 23 வீதமானவர்களே பூஸ்டர் டோஸைப் பெற்றுள்ளனர் என்று குழு வெளிப்படுத்தியுள்ளது. ஏனையோருக்கு எதிராக தண்டனைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்துள்ளோம். பொது இடங்களுக்குள் நுழையும்போது, முழுமையாக தடுப்பூசி செலுத்தியவர்களை அடையாளம் காணும் செயல்முறையை அறிமுகப்படுத்தவும், அன்டிஜென் மற்றும் சுய பரிசோதனை கருவிகளை வீடுகளுக்கு வழங்கவும் பரிந்துரைத்துள்ளோம்.

அத்துடன் உலக சுகாதார அமைப்பின் தரநிலைகளின்படி சோதனை ஆய்வகங்களைத் தரப்படுத்தவும் பரிந்துரைத்துள்ளோம். டிஜிற்றல் ஊடகம், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் அனைத்துச் சேவைகளைப் பயன்படுத்தி, பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கமுடியும் -என்றார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"உங்கள் மனதில் இருக்கும் குதூகலமும் மகிழ்ச்சியும் பிரச்சினைகளுடன் போராட மட்டும் அல்ல..அதிலிருந்து மீளவும் உதவும்." – சார்லி சப்ளின்

## மக்களைக் குழப்பாதீர்!

நாளொருதட்டுப்பாடும் பொழுதொரு விலையேற்றமுமாக இலங்கை மக்களின் வாழ்வாதாரம் அல்லாடிக் கொண்டிருக்கையில், அதனை இன்னும் அதிகப்படுத்துவது போல அரசாங்கமும் குழப்பகரமான அறிவிப்புகளை வெவ்வேறு தரப்புகள் மூலம் விடுத்துவருகின்றது.

கொரோனா இலங்கைக்குள் புகுந்ததில் இருந்து, இந்த அறிவிப்புக் குழப்பங்களும் தொடங்கியிருந்தன. எத்தனை பேருக்கு கொரோனா? எப்போது ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்? எந்தெந்தப் பகுதிகள் முடக்கப்பட்டன அல்லது முடக்கத்தில் இருந்து நீங்கின? என்றெல்லாம் சுகாதாரத் திணைக்களம் ஒருவிதமாகவும், பொதுப் பரிசோதகர்கள் சங்கம் இன்னொரு விதமாகவும், சுகாதார அமைச்சர் வேறு வகையிலும், கொரோனா ஒழிப்புச் செயலணித்தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திரா சில்வா இவையெல்லாவற்றையும் விட புதிய வகையிலும் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இதனால் எது உண்மையான அறிவிப்பு? எதை நம்புவது? எதை நம்பாமலிருப்பது? என்று மக்கள் நிறையவே குழம்பினர். கொரோனாவின் தாக்கத்தைவிடவும் இப்படியான குழப்பகரமான ஒன்றுக்கொன்று மாறுபட்ட அறிவிப்புகளே மக்களை அதிகம் ஆட்டிப்படைத்தன.

மெல்ல மெல்ல கொரோனா என்பது சகஜமான விருந்தாளிபோல நாட்டில் மாறத்தொடங்கியது. கொரோனாவை உயிர்கொல்லி நோயாகப் பார்த்த காலம் மலையேறியது. 'எனக்கும் கொரோனா' என்று சாதாரணமாகச் சொல்லி விட்டு, வீட்டில் தனிமைப்படுத்தலிலேயே அதனைக் குணமாக்குமளவுக்கு கொரோனாவுடன் மக்கள் 'வாழத்தொடங்கிவிட்டார்கள்'. அதனால் கொரோனாவைப் பற்றி எத்தனைவிதமான அறிவிப்புகள் வெளிவந்தாலும், எவ்வித அதிர்வையும் மக்களிடம் ஏற்படுத்தப்போவதில்லை. பூஸ்டர் டோஸ் போட்டுக்கொண்டவர்கள் இன்னும் அதிக தைரியத்தோடு கொரோனாத் தகவல்களைக் கடந்து போகப்பழகி விட்டார்கள்.

இத்தகைய நிலையில் இப்போது மக்கள் தமது வாழ்வாதாரத்தை ஆட்டம் காணவைக்கக்கூடிய சம்பவங்கள் பற்றி அறிவதிலேயே ஆர்வமாக இருக்கிறார்கள். அதிலும்கூட ஒருமுகப்பட்ட முடிவுகளை அரசாங்கம் வெளிப்படுத்தத் தவறிவருகின்றது.

அரிசி முதல் மெழுகுவர்த்தி வரை அனைத்தின் விலைகளும் இன்று விண்ணைத் தொட்டுள்ளன என்றால் அது இந்த அரசின் அதிகாரிகள் தமக்குள் சரிவரத் திட்டமிடாமல் தான் தோன்றித்தனமாக வெளியிட்ட கருத்துக்களால்தான் என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது. அரிசிக்கு ஒரு சமயம் ஒரு விலையை அரசு நிர்ணயிக்கும், அதன் பின்னர் கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்படும், அதற்கு ஒரு தரப்பு எதிர்ப்பை வெளிப்படுத்தும், பின்னர் மக்கள் எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு அரிசியை அதிகம் நுகர்வார்கள். வலிந்து ஏற்படுத்தப்பட்ட இந்த செயற்கைத் தட்டுப்பாட்டால் ஓரிரு நாள்களில் அரிசியின் விலை விண்ணைத் தொடும்.

இதேநிலை தற்போது மெழுகுவர்த்திக்குக்கூட ஏற்பட்டுள்ளது. மின்வெட்டுவரும் என்று ஒரு தரப்பும், வராது என்று ஒருதரப்பும், மின் உற்பத்தி செய்ய டொலரை விடுவிக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பும் பொதுவெளியில் கருத்து மோதல்களில் ஈடுபட்டன. உண்மையில் இவையெல்லாவற்றையும் உட்கார்ந்து கதைத்து முடிவெடுக்கத் தானே அமைச்சரவை என்ற ஒன்று உள்ளது. 'ஈஸ்டர் தாக்குதல் பின்னணி' போன்று வெளிப்படுத்த வேண்டிய விடயங்களை இந்த அரசு வெளிப்படுத்தவில்லை. ஆனால், வெளிப்படுத்தாமல் மக்களை பதற்றம் அடையவைக்காமல், தமக்குள் பேசி முடிவெடுக்க வேண்டிய விடயங்களை பொது வெளியில் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இதன் விளைவு என்ன? 100 வீதத்தால் இன்று மெழுகுவர்த்தியின் விலை எகிறியுள்ளது. மின்வெட்டை எண்ணிப் பதற்றமடைந்த மக்கள் அதீத நுகர்வை வெளிப்படுத்தியதால் வந்த வினை இது. இதற்கு யார் காரணம்?. நாட்டை கட்டியெழுப்புதல் என்பதும் வினைத்திறனான ஆட்சிமுறைமை என்பதற்கும் அர்த்தம் இதுதானா?

சிறந்த திட்டமிடல்கள் இருந்தால்போதும், இந்த நாட்டில் பாதிப் பிரச்சினை நீங்கிவிடும், பாதித் தட்டுப்பாடுகள் காணாமற் போய்விடும். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளில் அரைவாசியானவை, முறையற்ற முகாமைத்துவத்தால் இந்த அரசு தானாகவே இறுக்கிக்கொண்ட தேவையற்ற ஆணிகள்தான்.




# வடமாகாண அரச சேவையில் மோசடிகளுக்கு இடமேயில்லை

## மக்கள் சேவையே முன்னிறுத்தப்படும் ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜன. 26**

**வடமாகாண அரச சேவையில் ஊழல், அநீதி என்பன இடம்பெற ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன்.அதற்கு எனது ஆளுநர் சேவைக்காலத்தில் இடமில்லை எனக் காட்டமாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதியில் அனைத்து அரச சேவைகளையும் உன்னிப்பாகக் கண்காணித்து வினைத்திறனுடன் முன்னெடுத்து வருகின்றேன்.

இனிவரும் காலங்கள் வடக்கில் அனைத்துத் துறைகளும் பிரகாசமாக எரியும். அந்த நம்பிக்கையுடன் நான் செயற்படுகின்றேன்.

முழு விடயங்களையும் கவனிப்பதற்கும் கேட்பதற்கும் ஆளுநர் அலுவலகம் அர்ப்பணிப்புடன் முழுவீச்சில் ஈடுபடுகின்றது.

ஊழல், அநீதி என்பன இனிமேல் ஒருபோதும் இடம்பெறாது. அரசாங்க வேலையில் எவரும் அக்கறையின்மையாக இருக்கமுடியாது - என்றுள்ளது. (ம-50)



## மணல் ஏற்றியவர்கள் டிப்பர்களுடன் கைது

முல்லைத்தீவு, ஜன. 26

ஐயங்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சந்தேக நபர்கள் 6 டிப்பர்களுடன், அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக, சோதனையிட்டபோதே அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஒ-ரி1-74)

*தென்மராட்சியில்*

## 267 வேலைத்திட்டங்கள் தொடர்பில் பரிசீலனை!

தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டு 267 திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்கப் பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டன. இதன்படி அவசர மற்றும் முன்னுரிமை தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட திட்டங்கள் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ய-9)

நாளை 27.01.2022
வியாழக்கிழமை
தை 14

சுபநேரம் : 08.06 - 09.36
ராகுகாலம் : 02.06 - 03.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்கு விரைவில் முடிவு

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் உறுதி



**லண்டன், ஜன. 26**

**உலக நாடுகள் விரைவான நடவடிக்கைகளை எடுத்தால், தடுப்பூசிப் பகிர்வை சரியான முறையில் நடைமுறைப்படுத்தினால் இந்த ஆண்டிலேயே கொரோனாவுக்கு முடிவு கட்டலாம் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் அதானம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்: கொரோனாவை ஒழித்துக் கட்டுவதில் பிராந்திய, தேசிய, சர்வதேச ரீதியாக உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. நாடுகளுக்குத் தேவையான ஆதாரங்கள், வியூகங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகிறது. நாடுகள் இந்த வியூகங்களைப் பயன்படுத்தி, விரிவான நடவடிக்கை எடுத்தால், நாம் இந்த ஆண்டிலேயே கொரோனாவுக்கு முடிவு கட்டலாம். கொரோனாவில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு, இதுபோன்ற நெருக்கடிகளைத் தடுக்க புதிய தீர்வுகளை உருவாக்கவேண்டும். தொற்று முடியும் வரை காத்திருக்கக்கூடாது - என்றார். (ம)



### இரண்டாம் உலகப்போரின்

# விமானச் சிதைவு இமயமலையில்!

பீஜிங், ஜன. 26

இரண்டாம் உலகப்போரின்போது விபத்துக்குள்ளான சீனாவின் விமானமொன்று இமயமலைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குன்மிங் பகுதியில் இருந்து 1945ஆம் ஆண்டு 13 பேரை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட அந்த விமானம் காணாமற் போயிருந்தது. இந்த நிலையில், இமய மலைப்பகுதியில் இருந்து குறித்த விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம)



## கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவெடுத்தது பிரிட்டன்!

லண்டன், ஜன. 26

பிரிட்டனில் கொரோனாத் தொற்று நாளுக்குநாள் குறைந்து வருவதையடுத்து, கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு பிரிட்டன் அரசு முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் விடுத்த அறிவிப்பில்,

"பிரிட்டனில் கொரோனா பரவல் குறைந்து வருகிறது. இதனைத் தொடர்ந்து கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி இரவு விடுதிகள், உணவு விடுதிகள், களியாட்ட விடுதிகள் உள்ளிட்டவை மீண்டும் திறக்கப்படும். பணியாளர்கள் அலுவலகங்களுக்கு வந்து பணி செய்யலாம். முகக்கவசங்கள் இனிக் கட்டாயம் இல்லை. எனினும், நெரிசலான இடங்களில் பொதுமக்கள் முகக்கவசம் அணிவது நல்லது" - என்று தெரிவித்தார். (ம)



# ஐ.எஸ். அமைப்புடன் குர்துக்கள் மோதல்!

## *123 பேர் உயிரிழப்பு*

டமஸ்கஸ், ஜன. 26

சிரியாவில் குர்துப் படைகளுக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 123 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பிரிட்டனில் இயங்கும் போர் கண்காணிப்புக் குழு தெரிவிக்கையில்; 'குர்து கட்டுபாட்டில் உள்ள ஹசாகா நகரில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர்கள் உட்பட 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ள குவேரன் சிறைச்சாலை மீது ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதனால் குர்து படையினருக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் வெடித்தது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் சிறைச்சாலையை நெருங்கவிடாமல் குர்து படையினர் தடுத்தனர். எனினும், ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களது தலைவர்கள் சிலரை விடுதலைசெய்து, சிறைச்சாலையிலிருந்து ஆயுதங்களையும் கைப்பற்றினர். இந்த மோதலில் குர்து படையினர் 39 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ். தீவிரவாதிகள் 84 பேர் பலியாகினர். சிறைச்சாலையிலிருந்த அதிகாரிகள் சிலரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் இதுவரை 123 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது. (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புத்துணர்ச்சி பெருகும். பிறரது நன்மதிப்பைப் பெறுவீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு நல்ல செய்தி வரும். உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பாராத லாபம் வந்து திக்குமுக்காட வைக்கும். தந்தை நலமடைவார்.

**இடபம்:** தாமதித்துக் கொண்டிருந்த நன்மை இன்று தானாக நடை பெறும். பொறுமையால் வெல்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பு உண்டு. சமீபத்தில் ஏற்பட்டிருந்த தொல்லை ஒன்று நீங்கும்.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணையுடன் ஒற்றுமை பலப்படும். பல வகைகளில் நன்மை அளிக்கும் அதிர்ஷ்டம் தேடி வரும். அங்கு ... துணைதூக்காமல் யணிவாக இருப்பது நல்லது.

**கடகம்:** வீட்டில் நடக்கும் சுப நிகழ்வுகளின் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். மன நிம்மதி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்:** பல காலத்திட்டம் ஒன்று நிறைவேறி மகிழ்ச்சி அளிக்கும் சகோதரர்களால் நன்மை உண்டு. மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரித்து சந்தோஷம் தரும்.

**கன்னி:** குடும்பத்தினருடன் இன்று உற்சாகமாகப் பொழுது போகும் குழந்தைகள் பற்றிய கற்பனைக் கவலைகள் வேண்டாம். பல நாள் ... பணி வந்து மகிழ்விக்கும்.

**துலாம்:** எதிர்பாராத நன்மை வரும். உறவினரால் ஆதாயம் உண்டு. செலவுகள் அதிகரிக்கும். கருணை எண்ணம் வரும். நிம்மதி உண்டு. பேச்சில் இரட்டிப்புக் கவனம் தேவை.

**விருச்சிகம்:** உங்களது பேச்சில் கவர்ச்சி அம்சம் கூடும். நட்புவட்டம் விரியும். எதிர்பாராத வேலை வாய்ப்பு வரும். அதை உடனே ஏற்றுக்கொள்ளுங்கள். நம்ப வேண்டியவர்களை நம்பாமல் சிரமப்பட வேண்டாம்.

**தனுசு:** கோபத்தைக் கட்டுப்படுத்தி நன்மை காணுங்கள். கூடுதல் வருமானத்துக்கு புதிய வழியை கண்டுபிடிப்பீர்கள். நெருங்கியவரிடம் உங்களது கோபத்தை காட்டி சிரமப்படுத்தாதீர்.

**மகரம்:** குடும்பத்தினரின் செயற்பாடுகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். தாயாருக்கு உங்களால் சிரமம் வராதபடி கவனமாக இருங்கள்.


**கும்பம்:** வெளிநாட்டில் இருந்து வருமானம் வர வாய்ப்பு உள்ளது. குழந்தைகளால் ஏற்பட்ட மனஅழுத்தத்தை அவர்களே நீக்குவார்கள். விளையாட்டாகக்கூட யாருக்கும் தீமை செய்ய வேண்டாம்.

**மீனம்:** உங்களின் செயல் காரணமாக பிரிந்த குடும்பங்கள் இணையும். பொருள்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். குழந்தைகள் முன்னேறுவர். நண்பரின் செயல் நன்மை அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஜெகசோதிமலர் சடாட்சரம்



யாழ் . உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் பிரான்ஸ் Neuilly -sur - Marne ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ஜெகசோதிமலர் சடாட்சரம் அவர்கள் கடந்த (21.01.2022) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை சடாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சற்குணசோதிமலர் மற்றும் அற்புதசோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்துராணி (பிரான்ஸ்), கலாலோஜினி (கனடா), புவிச்சந்திரன் (உரிமையாளர் - வினோ நகைப் பூங்கா - யாழ்ப்பாணம்), புலேந்திரன் (Jeyam Multi Express - சுவிஸ்), சதீஸ்வரன் (பிரதிப்பணிப்பாளர் - விவசாயத்திணைக் களம் - கிளிநொச்சி), பிரதாபன் (Franprix- பிரான்ஸ்), காலஞ்சென்ற தனிஸ்வரன், மகிந்தன் (வினோ நகைப் பூங்கா - யாழ்ப்பாணம்), கவிதாலோஜினி (ஜேர்மனி), நிகிர்தாலோஜினி (கனடா), நிர்மலாலோஜினி (பிரான்ஸ்), மதனரூபன் (Paris Corner / Sadasothy Private Ltd - லண்டன்), ஜசிந்தாலோஜினி (கண்டி) ஆகியோரின் அருமைத் தாயாரும், நித்தியானந்தன், சரவணபவன், வித்தியா, ஜெயகௌரி, சுகன்யா, துஷியந்தினி, தயானந்தி, சுதாகரன், ஜோதிமுருகன், ஸ்ரீகந்தராசா, சுஜிதா, இந்திக ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜேன், அனிந்திகா, வினோத், பிரியங்கா, பிரியன், சன்ஜித், சுவஸ்திகா, பிருதுவி, பிரவின்ஜா, பர்விஜன், பிறினவ்ஜா, இந்துஜா, அதிகன், மாலதி, விதுஷிகா, விதுரன், சத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 02.02.2022 பிரான்ஸ் நேரப்படி 9.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ச.புவிச்சந்திரன் - 077 381 6850
ச.சதீஸ்வரன் - 077 603 4656
ச.மகிந்தன் - 077 603 4331

தகவல்:
குடும்பத்தினர்

(cs 1211) (2.6)

# பொருளாதாரக் கொள்கையில் இலங்கை அரசு முட்டாள்தனம்

## பொருளியல் நிபுணர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.26

**இலங்கை அரசு உள்நாட்டுப் பொருளாதாரத்தில், முட்டாள்தனமாகச் செயற்படுகின்றது என்று லண்டன் அடம்ஸ் ஸ்மித் நிறுவகத்தின் சிரேஷ்ட பொருளியல் நிபுணர் டிம் வோர்ஸ்டால் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:- அந்நியச் செலாவணியின் விலையையும், அளவையும் கட்டுப் படுத்த முயற்சித்தால் மட்டுமே, ஒரு நாட்டில் அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்படும்.

இதை அறியாது இலங்கை அரசு கடனில் சிக்கியுள்ளது. சர்வதேசப் பொருளாதாரம் எவ்வாறு இயங்குகின்றது என்பதில் இலங்கையின் அறிவின்மை புலனாகின்றது.

இலங்கை அரசு திருப்பிச் செலுத்துவதை விட அளவுக்கு அதிகமாகக் கடனைப் பெற்றுள்ளது. கடனைக் கொடுப்பவர்கள், இன்னும் அதிகமாகக் கடன் கொடுக்கத் தயாராக இல்லை என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம் அல்ல. நாட்டின் விவசாயத் துறையும் இயற்கையாகவே செல்ல வேண்டும் என்று இலங்கை அரசு முடிவு செய்தது.

எனினும் வரையறுக்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்தி, மேற்கொள்ளும்போது உணவு உற்பத்தி குறைவாகவே இருக்கும் என்பதில் ஆச்சரியப்பட முடியாது.

உரத்தைக் குறைவாகப் பயன்படுத்தும்போது அதிக நிலம் இல்லை என்றால், அங்கு உணவு உற்பத்தி குறைவாகவே இருக்கும் - என்றார்.

(ம-4-இ)

# சிறுவர் பூங்காவுக்கு அடிக்கல்



கிளிநொச்சி,ஜன.26

கிளிநொச்சி, மலையாளபுரத்தில் அமைந்துள்ள விசேட தேவைக்கு உட்பட்டோருக்கான வலையமைப்பு வளாகத்தில், சிறுவர் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நடப்பட்டது.

குடத்தனை பொற்பதியைச் சேர்ந்தவரும், புலம்பெயர்ந்து நியூஸிலாந்தில் வசிப்பவருமான செல்வதாஸின், தாயாரான அரியதாஸ் மேரிறெஜினா ஞாபகார்த்தமாக சுமார் 16 லட்சம் ரூபா செலவில், குறித்த சிறுவர் பூங்கா அமைக்கப் படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நட்டார்.

நிகழ்வில் பங்குத்தந்தை, பாரதிபுரம் வித்தியாலய முதல்வர், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், பாரதிபுரம் வட்டார பிரதேசசபை உறுப்பினர் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

(ம-4-113)

# இலங்கைத் தமிழ்க் குடும்பத்துக்கு நீண்டகாலத்தின் பின்னர் தீர்வு

கொழும்பு,ஜன.26

மிகப் பெரிய சர்ச்சைகளை ஏற்படுத்திய, இலங்கைத் தமிழ்க் குடும்பம் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவில் தங்கி இருக்க அனுமதி கிடைத்துள்ளது.

விசா விண்ணப்பிப்பதற்குத் தடைவிதித்து அவுஸ்திரேலியக் குடியேற்ற விவகார அமைச்சர் வெளியிட்ட உத்தரவு சட்டவிரோதமானது என்று அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனால் இலங்கைத் தமிழ்க் குடும்பத்தினரான நடேசலிங்கம், பிரியா முருகப்பன் மற்றும் அவர்களின் இரண்டு பெண் குழந்தைகள் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவில் தங்கி இருக்க அனுமதி கிடைத்துள்ளது.

எனினும் இந்தக் குடும்பத்தினர் மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் என்று அவர்களின் சட்டத்தரணிகள் வழக்கு விசாரணைகளின் போது வாதங்களை முன்வைத்திருந்தனர்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற இந்த இருவரும் அவுஸ்திரேலியாவில் திருமணம் செய்து கொண்டதுடன், அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்துள்ளன.


கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த போது இவர்களின் இளைய மகள், கடந்த ஆண்டு சுகவீனமுற்றதன் காரணமாக பேர்த்தில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனையடுத்து இவர்களின் விசா சம்பந்தமாக நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

(ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடைந்த அரசால் நாடு இருண்ட யுகத்துக்குள்


## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 26

**தற்போதைய அரச நிர்வாகம் நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்கு தள்ளுகின்றது. இந்த அரசின் இரண்டு ஆண்டுகள் ஆட்சி தோல்வியடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டுக்கு குப்பி விளக்குடன் அவர் வருகை தந்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளைக் குறைக்க முன்வந்தால், குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது அது சிக்கலை ஏற்படுத்தும். தற்போதைய மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசிடம் கூட்டு அணுகுமுறை இல்லை. தடையில்லாது மின்சாரம் வழங்கும் திட்டமும் அரசிடம் உள்ளதா என்று தெரியவில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் தலையீடு செய்யவில்லை. மக்களைக் குற்றஞ்சாட்டியே மகிழ்ச்சியடைகின்றனர் - என்றார். (ம-4-இ)



## பதுளை – கொழும்பு இடையே சொகுசு விரைவு ரயில் சேவை

கொழும்பு, ஜன. 26

பதுளை - கொழும்பு இடையே அதிநவீன வசதிகளுடன்கூடிய, புதிய சொகுசு விரைவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் தினமும் இரவு 9 மணிக்கு பதுளை ரயில் நிலையத்திலிருந்தும், கொழும்பிலிருந்து இரவு 8.30 மணிக்கும் சேவையில் ஈடுபடும். இதற்காக இரண்டு அதிநவீன அதிவேக ரயில்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் மூன்றாம் வகுப்பு ரயிலின் கட்டணம் 275 ரூபா. கண்டிக்கான கட்டணம் 195 ரூபா.

அதேவேளை, முதலாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட அறையின் ஆசனக் கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவாகவும், பதுளையில் இருந்து கொழும்புக்கு 2ஆம் வகுப்புக்கான கட்டணம் 490 ரூபாவாகவும், கண்டிக்கான கட்டணம் 350 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பதுளை ரயில் நிலைய அதிகாரி கே.சதீஸ்குமார தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## நீர்த்தொட்டிக்குள் வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு



புத்தளம், ஜன. 26

இறால் பண்ணையிலுள்ள நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மகாமாலிய பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் இறால் பண்ணையில் இறால்களுக்கு காலை நேர உணவை வீசிக் கொண்டிருந்த போது இந்த விபரீதம் நடந்துள்ளது. (ம-4-இ)

## ஆப்கானிஸ்தானில் உள்ள இலங்கைத் தூதரகம் பூட்டு

கொழும்பு, ஜன. 26

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அங்குள்ள நெருக்கடியான அரசியல் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காபூலை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, காபூலுக்கான இலங்கைத் தூதுவர் தனிப்பட்ட விடுமுறையில் இலங்கைக்குத் திரும்பியுள்ளார்.

இதனையடுத்து காபூலில் உள்ள இலங்கைத் தூதரகத்தை மூடுவதற்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு விடுத்த பரிந்துரைக்கு அமைவாக, தூதரகம் மூடப்படவுள்ளது. (ம-4-இ)

## துணைவேந்தர் நியமனம்: ஜனாதிபதிக்கு அழுத்தம்

கொழும்பு, ஜன. 26

வயம்ப பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக் கடமையாற்றும், எச்.எம்.ஏ.ஹேரத்தை, துணைவேந்தராக நியமிக்குமாறு கோரி, அமைச்சர்கள் சிலர், ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களான டி.பி.ஹேரத், சனத் நிஷாந்த மற்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்த மேலும் இருவர் எச்.எம்.ஏ.ஹேரத்தின் பெயரை முன்மொழிந்துள்ளனர்.

அத்துடன்வியத்கமகுளியாபிட்டிய கிளையின் தலைவர் சட்டத்தரணி மாயாதுன்னே செனவிரத்ன, அதன் செயலாளர் சிந்தக டி சில்வா மற்றும் இலங்கைப் பொது மருத்துவர்கள்சங்கத்தின் அழைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்மிக்க வீரதிலக ஆகியோரும் இது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

## மஹாநாம பதவி விலகல்



கொழும்பு, ஜன. 26

விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட கிரிக்கெட் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக அங்கம் வகித்த ரொஷான் மஹாநாம, அந்தக் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளார்.

[illegible] அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)



## அபினுடன் முதியவர் கைது

மட்டக்களப்பு, ஜன. 26

அபின் போதைப்பொருளுடன், கல்குடாவைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான 460 கிராம் அபின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை கடத்திச் செல்லப்பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4-இ)

## ஹெரோய்னுடன் சிக்கியது படகு

### அறுவர் கைது

கொழும்பு, ஜன. 26

இலங்கையின் தென் கடற்பரப்பில் 300 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன், இழுவைப் படகு ஒன்று மடக்கிப்பிடிக்கப்பட்டது. அதிலிருந்த 6 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும், கடற்படையினரும் இணைந்து சுற்றி வளைப்பை மேற்கொண்டனர். அதன்போதே படகு கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## முன்னாள் அமைச்சரின் மகன் போதைப்பொருளுடன் கைது

திருமலை, ஜன. 26

ஹஸீஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப் பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர், கிண்ணியா அஹமட் லேன் பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் திருகோணமலை மாவட்ட முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின், மூத்தமகன் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிராந்திய பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் போதைப்பொருளுடன் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு விலை நிர்ணயம்!



**கொழும்பு, ஜன. 26**

**கடந்த போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான நிர்ணய விலை அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது.**

அதற்கமைவாக நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபை ஊடாக ஒரு கிலோ நெல் தலா 75 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படும். அத்துடன் விவசாயி களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 40 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில், விவசாய அமைச்சர் மஹிந்தானந்த இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைவாக 2020-2021 பெரும் போகத்தில் விளைச்சல் குறைந்து பாதிப்புகளை எதிர்நோக்கும் விவசாயிகளின் வருமானத்தை பாதுகாக்க ஒரு கிலோ நெல்லுக்கு 25 ரூபா வீதம் நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 40 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-இ)

## சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, ஜன. 26

சாவகச்சேரி நகரில், பூட்டப்பட்டிருந்த சைக்கிள் இனந்தெரியாதோரால் கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் டச்சு வீதியில், வீதியோரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருள்களை வாங்கச் சென்றுள்ளார். திரும்பி வந்தபோது சைக்கிள் திருடப்பட்டிருந்ததை அவதானித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-4-9)

## சமுர்த்திச் சபையின் பொதுக்கூட்டம் நேற்று

சாவகச்சேரி, ஜன. 26

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திக் கட்டுப்பாட்டுச் சபையின் பொதுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

சாவகச்சேரி ,கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய 4 சமுர்த்தி வலயங்களிலிருந்தும் தலா 15பேர் வீதம் இதில் பங்குபற்றியிருந்தனர். நிர்வாகிகள் தெரிவில் கைதடி சமுர்த்தி வலயத்தைச் சேர்ந்த திருமதி பி. கிரிஜா தலைமையில் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத் தலைவர் சத்தியலட்சுமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர். மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர், தென்மராட்சிப் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், சமுர்த்தி வலய முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-4-9)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன. 26

தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் மா.மதிவண்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-4-159)

## சுதந்திர தினத்தன்று மரக்கன்றுகள் நடுகை

சாவகச்சேரி, ஜன. 26

நாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று, அனைத்து பிரதேச செயலகங்களாலும் மரக்கன்றுகளை நடுகை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகமும் தலா 100 மரக்கன்றுகள் நடுகை செய்வதுடன், பிரதேசங்களில் காணப்படும் ஆக்கிரமிப்புக் களைகளை சிரமதானம் மூலம் அப்புறப்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 33 கிராம அலுவலர் பிரிவுகளில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட 7 இடங்களில் சிரமதானம் மூலம் ஆக்கிரமிப்புக் களைகளும் அகற்றப்படவுள்ளன. (ம-4-9)



## தண்ணீரூற்று சந்தையில் குழுவொன்று அடாவடி!

### மூவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 26

முள்ளியவளை தண்ணீரூற்று பொதுச்சந்தையில் நான்குபேர் கொண்ட கும்பலொன்று நேற்றுமுன்தினம் அதிகாலை அடாவடியில் ஈடுபட்டுள்ளது. இதன்போது சந்தையின் காவலாளியான 60 வயதுடைய நபர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தையைக் குத்தகைக்கு எடுத்தமை தொடர்பில் எழுந்த பிரச்சினையால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் இரண்டு கடைகளின் கதவுகள், கடைகளின் கட்டடங்கள் மற்றும் பொருள்கள் சேதமடைந்துள்ளன. சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (வ-19)

## சந்தையில் தாக்குதல் விஜிந்தன் கண்டனம்!

முல்லைத்தீவு, ஜன. 26

முள்ளியவளை தண்ணீருற்று பொதுச்சந்தையில் குழுவொன்று அடாவடியில் ஈடுபட்டமைக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் க.விஜிந்தன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சந்தையில் நிலவும் குத்தகைதாரர்களின் போட்டியால் அரச பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிரதேசசபையின் நிர்வாக நடவடிக்கையைக் குழப்பும் விதமாக போதையில் வந்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். மக்களுக்கு சேவைகளை வழங்கவே பிரதேசசபைகளின்கீழ் பொதுச்சந்தைகள் காணப்படுகின்றன. தனிப்பட்ட போட்டிக்காக அரசசொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. பிரதேசசபையின் நிர்வாக எல்லையின்கீழ் அனுமதியற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு நிர்வாகம் இடம் கொடுக்காது - என்றார். (வ-19)



## இரு வேறு பகுதிகளில் கைக்குண்டுகள் மீட்பு

கிளிநொச்சி,ஜன.26

தருமபுரம் மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் நேற்று இரு வேறிடங்களில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு பகுதியில் வீதி அருகே கைவிடப்பட்ட காணியிலும், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு மகா வித்தியா ஸயத்துக்கு அருகிலுள்ள கால்வாயில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து மீட்கப்பட்ட கைக்குண்டுகளை நீதிமன்றின் அனுமதியுடன், செயலிழக்கச் செய்ய சிறப்பு அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4-113)

## விவசாயச் செய்கைக்கு நீர்த்தட்டுப்பாடு வராது

### அமுனுகம உறுதி

கொழும்பு, ஜன. 26

நீர் மின் உற்பத்தித் திட்டத்தால், விவசாயச் செய்கைக்கு நீர்த் தட்டுப்பாடு ஏற்படாது என்று இராஜாங்க அமைச்சரான திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நீர்த்தேக்கங்கள் நீர் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படும் அதேவேளை, குறிப்பிட்ட சில ஏரிகள் மற்றும் ஆறுகள் விவசாய நிலங்களுக்கு நீரை வழங்கும்.

அதேவேளை வாகனங்களை இயக்குவதற்குத் தேவையான எரிபொருள் மற்றும் மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் வழங்கப்படும். தற்போது ஆதாரமற்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒருசில கட்சிகள் அன்றாடம் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. எதிர்க்கட்சியிலுள்ள சில தரப்பினர், தங்களது அரசியல் பிழைப்புக்காக ஒவ்வொரு முனையிலும் பிரச்சினை களை உருவாக்கி வருகின்றனர் என தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 11 . 1945



இறப்பு
25 . 01 . 2022

## அமரர் இளையப்பு மயில்வாகனம்

(இலங்கை மின்சார சபை ஓய்வு நிலை ஊழியர்)

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு மயில்வாகனம் நேற்று (25.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதி, தயாநிதி (ஆசிரியர், யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரகுலசிங்கம் (கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், மதுசாஜிகா, துஷந்திகா (மாணவிகள், யா/இந்து மகளிர் கல்லூரி), டினுசன் (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), தரணிகன் (யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், கோபாலசிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 1213) (2.6)

# பதினாறாம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
06 . 10 . 1961



இறப்பு
11 . 01 . 2022

இணுவிலைப் பிறப்பிடமாகவும்,
கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சிவனேஸ்வரி இராஜநாதன்

உன் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்
எம் குடும்ப ஒளிவிளக்காய் ஒளிர்ந்தவளே
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
பதினாறு நாள்கள் ஓடின
என்றும் உம் நினைவுகளுடன் வாழுகிறோம்
நினைவில் எம்முடன் நிஜத்தில் நீர்
இறைவனிடம் கலந்திட்ட உன் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவுகளுடன்
மைத்துனி விஸ்வலிங்கம் வள்ளிநாயகி
மற்றும் குடும்பத்தினர்.

சாத்தாகலட்டி,
அளவெட்டி மத்தி.

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 08 . 1942



மறைவு
23 . 01 . 2022

## திருமதி பவளராணி தில்லைநாதன்

(முன்னாள் ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக் கல்லூரி)

கேணியடி திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளராணி தில்லைநாதன் (தம்பையா மிஸ்) கடந்த (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தையல்நாயகி தம்பதியரின் மருமகளும், தில்லைநாதனின் (ஓய்வுபெற்ற கணக்காளர்) அன்பு மனைவியும், லவன் (பிரதி நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகா (ஆசிரியை, வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ராஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆதிரா, ஆசிகா, லாருஜன், ஹரினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விசாகநாதன், கேதீஸ்வரநாதன், சேதாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 2868 696

# மரண அறிவித்தல்



## வேலன் தில்லைநாயகம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் - மின் பாதையாளர்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் தில்லைநாயகம் கடந்த (22.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - சின்னன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், சரவணமுத்து, சிவக்கொழுந்து, கந்தையா, துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திலகராணி, ஜெயராணி, புஸ்பாகரன், லலிதாகரன், தனஞ்ஜெயன், குகதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் நந்தகுமார், பெர்ணதேத், வஸ்த்தலாதேவி, சகிதா, கௌசிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா, நவமணிதேவி, சிவலோகநாதன், தவராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரவீனா, கிஷாந், பபிசன், யஸ்மிகா, யசிகன், நயானா, அபினா, லியோன், ராகுஜன், லிதுசன், தக்ஷித், ரோஹித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 691 3007

(cs 1174) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் மீது தாக்குதல்



கொடிகாமம், ஜன.26

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை நுணாவில் கனகம்புளியடி வீதியில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற பஸ் மீதே கல் வீசப்பட்டுள்ளது. சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரே தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-159)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரில் இருந்து 7 KM க்குள் வீடு வாடகைக்கு உடன் தேவை. (K.K.S றோட் விரும்பத்தக்கது)

தொடர்பு கொள்ளவும்:

075 160 5838, 076 112 4145

## தேவை

புங்குடுதீவு பிரதான வீதியில் காணி தேவை.

தொடர்பு:- 077 729 5428

(cs.42476) (2.6)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பாசல் நிறுவனத்திற்கு

- மனேஜர்
- சிட்டைஎழுதுனர்
- காசாளர்
- உதவியாட்கள்

உடன் தேவை.

உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 0773866250

## வேலைவாய்ப்பு

உள்ளூர் உற்பத்தி பொருள்களை கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு விற்பனை பிரதிநிதி தேவை.

சம்பளம் 45000/=

076 191 8214

(cs.1213) (2.6)

## யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

எதிர்வரும் (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை

முற்பகல் 9.30 மணிக்கு

கல்லூரி நூலக மண்டபத்தில்

நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், ப.மா.சங்கம்.

(cs.1209) (2.6)

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவை.

1. Motor and Pump Repairs
2. Welders
3. Labours

தொடர்புகளுக்கு: 077 355 3959

(CS 1220)1-6

## உடனடி பயணம்

## கனடா, லண்டன்

ஆகிய நாடுகளுக்கு தாமதமில்லா ORIGINAL VISA க்களுடன் உடனடி பயணம்.

குறிப்பு:- (CTC) கப்பல் பயிற்சி பெற்றவர்கள் கப்பலில் வேலை செய்தவர்களுக்கு விசேட உடனடி குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் உடன் பயணம்

Hotline 077 6222631

## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் LOVELY Flower நிறுவனத்திற்கு பெண் பணியாளர் தேவை.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 400 5023

(cs.1212) (2.6)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 06.05.1943 மறைவு : 25.01.2022

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி செல்வன் நாகநந்தினி அவர்களின் தாயார்

### திருச்செந்தூர் முத்துப்பிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

(CS 1219)1-6

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### திரு. இராசேந்திரம் புவன்ராஜ்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், தரம் - I யாழ்ப்பாணம்)

தோற்றம் 20.08.1968

மறைவு 09.02.2018

காலன் உயிர் பறிக்க சோகத்தை தந்து இன்றுடன் ஆண்டு நான்கானாலும் அப்பா உங்கள் நினைவு ரணமாய் உள்ளது.

எங்கள் வாழ்க்கைக்கு ஒளி கொடுத்த தெய்வமே......

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி !!! சாந்தி !!! சாந்தி !!!

(cs.42419) (2.6) மனைவி, பிள்ளைகள்.

## திருத்தம்
## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

**2022ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, வேலைத் தொழிலாளி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்**

**20.01.2022 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் கேள்வி அட்டவணை பின்வருமாறு திருத்தப்படுகின்றது.**

| பெறுகை இலக்கம் | சேவை | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை-(09Hrs.) | 03 | 365 நாட்கள் | 34,000.00 | 01.06.2022 |
| | வேலைத் தொழிலாளி (09Hrs.) | 03 | | | |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை-(08Hrs.) | 09 | 365 நாட்கள் | 28,000.00 | 01.06.2022 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை-(12Hrs.) | 03 | 365 நாட்கள் | 14,000.00 | 01.06.2022 |

சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 20.01.2022 தொடக்கம் 02.02.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்க்ஷன்,**
**தவிசாளர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்.**
**26.01.2022**

(cr.37430) (2.6)

## துயர் பகிர்வு



எமது பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு உதவித் திட்டங்களை மனமுவந்து வழங்கிவரும் **சடாச்சரம் புவிச்சந்திரன் (வினோ நகைப் பூங்கா), கவிதாலோயினி சுதாகரன் (ஜேர்மனி), சடாச்சரம் புலேந்திரன் (சுவிஸ்), சடாச்சரம் சதீஸ்வரன் (பிரதி விவசாயப் பணிப்பாளர் - வட மாகா ணம்)** ஆகியோரின் அன்புத் தாயாருமான

அமரர்

### ஜெகசோதிமலர் சடாச்சரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி யடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலைச் சமூகம்

யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

நீர்வேலி.

(CS 1227)1-6


Supported by the Federal Ministry for Economic Cooperation and Development — german cooperation; Coordinated by sequa; Implemented by OAV German Asia-Pacific Business Association; Local Project Partner CCIY; cooperation partner AHK; BMZ Partnership

## கட்டுமானத் திட்டங்களில் பொருள் விலை அதிகரிப்பின் தாக்கங்களை நிர்வகித்தல்

CCIY இன் இரண்டாவது இணையவழி கருத்தரங்கு

புதன் கிழமை, 26 ஜனவரி, 2022

From 2:00 pm to 4:00 pm

Via Zoom
- Meeting ID : 878 8046 8025
- Passcode : 430076

பேச்சாளர்கள்



N. நந்தரூபன் (தலைவர், CCIY) B.Sc. Eng, P.G.dip (CPM), C.Eng, MIE(SL), Green AP SL



A. முகுந்தன் B.Sc. Eng., PMP, PG Dip, CEng , MIE (SL), MSSE (SL), Green SL AP, Dip (Con.Adj)

நெறிப்படுத்துபவர்




T. யூறிசன் ஜெனராஜ் (CEO, CCIY) B.Com.(Hons), MA.(Pub.Admin)

பதிவுகளுக்கு

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம் No.55, Kachcheri Nallur Road, Jaffna.

தொடர்புகளுக்கு Tel: +9421 222 6609/ +9470 366 3603 Web:-www.cciy.lk Email:-info@cciy.lk


## மரண அறிவித்தல்



### திரு.கந்தையா வேலாயுதபிள்ளை (VM சின்ராசு)

வவுனியாவை பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (25.01.2022) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.01.2022) புதன் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
076 2020 469

(CS 1070) 1/6

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொரோனாவை விடவும் பல வைரஸ்கள் நாட்டில்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜன.26

நாட்டில் தற்போது கொரோனா வைரஸுக்கு மேலதிகமாக மேலுமொரு புதிய வைரஸ் பரவி வருகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் அபிரசாத் கொலம்பகே, தற்போது நாட்டில் பல வைரஸ்கள் பரவி வருகின்றன என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கொரோனா வைரஸுடன் அதைப் போன்ற இயல்புடைய இன்னொரு வைரஸ் தொற்றும் பரவி வருகின்றது. அதே நேரம் நாட்டில் டெங்குத் தொற்றும் தீவிரமடைந்திருக்கின்றது. புதிய வைரஸ் பரவலால் நாடு இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கும் - என்றார். அதேவேளை, ஒமிக்ரோன் திரிபுத் தொற்று அல்லது கொரோனா வைரஸின் பிற திரிபுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதி, சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அதிகாரிகளுக்கு இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளது. சிறப்பு மருத்துவர்கள், பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுகாதார நிபுணர்கள் அடங்கிய 12 பேர் கொண்ட குழுவால் இந்த அறிக்கை தொகுப்பட வுள்ளது. (எ-இ)

(தொடர்புடைய செய்தி 6ஆம் பக்கத்தில்)

# 43 எம்.பிக்களுக்கு கொரோனா

கொழும்பு, ஜன.26

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது. இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல ஆகியோருக்கு நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதியானது. அதேவேளை, கடந்த வாரம் ஒன்பது நாடாளுமன்ற மன்ற உறுப்பினர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தனர். (எ-இ)



## மரண அறிவித்தல்

மண்ணில் 08 . 04 . 1950



விண்ணில் 23 . 01 . 2022

### திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி

கைதடி நாவற்குழி, கைதடியை (மறவன்புலவு) பிறப்பிட மாகவும், வசிப்பிட மாகவும் வெள்ளவத்தையை (கொழும்பு) தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான SK ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், விஜயகுமார்(ஜேர்மனி), வினோதினி (ஆசிரியர், கிளி/பூநகரி மத்திய கல்லூரி), விக்னகரன் (UK) விஜிந்தினி (இலங்கை மத்திய வங்கி) விஜயரதனி (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா (ஜேர்மனி), செல்வகுமார் (வர்த்தக முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), தனுஜா (UK), பிரபாகரன் (Senior Accountant, Finacedirect), மதிராஜ் (ஆசிரியர், யா/வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், தங்கம்மா, பொன்னையா, சாந்தநாயகி, பஞ்சரத்தினம், ஸ்ரீகாந்தன் மற்றும் சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, திருஞானசக்தி, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் விஜேழினி, விதுசினி, விபூசினி, விறுஷன், விதுஷிகன், திஷானன், மேஹாசினி, கிருஷிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2022) புதன்கிழமை கைதடி நாவற்குழி, கைதடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலவு தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி நாவற்குழி, கைதடி.
021 205 0953

தகவல்:
குடும்பத்தினர்

(CR 7165) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 04.10.1964

மறைவு 25.01.2022

### திருமதி
### கமலநாதன் பத்மாவதி

ஏழாலை மேற்கு, குரும்பசிட்டிவளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலநாதன் பத்மாவதி அவர்கள் நேற்று (25.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், கமலநாதனின் பாசமிகு மனைவியும், லக்சாயினி, பிரசாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், குகனேஸ்வரி (அமரர்), இரத்தினேஷ்வரி, கருணானந்தம் (அமரர்), இலங்கேஸ்வரி, நித்தியானந்தம், பவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசரத்தினம், சகுந்தலாதேவி, மகாராசா (அமரர்), ஞானேஷ்வரி, சத்தியபாமா, தவமணி, உருத்திரகணேசலிங்கம் (சுவிஸ்), நாகேஸ்வரி, பவளராணி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நித்தியானந்தம் - 076 673 9537
இலங்கேஸ்வரி : 077 230 9358

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளத் தீவிரமடைகிறது கொரோனாத் தொற்று

## சுகாதாரப் பணியகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.26

ஒமிக்ரோன் திரிபு தொற்றுக்குள்ளான, எந்தவித அறிகுறியும் வெளிப்படாத கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பாரதூரமான அளவில் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு சுகாதாரப் பணியகத்தின் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒமிக்ரோன் திரிபுத் தொற்றில் அதிகரிப்புத் தன்மை ஒன்று காணப்படுகின்றது. தொடர்ச்சியாக 6 நாள்களாக 800க்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 24 நாள்களில் 15 ஆயிரத்து 197 கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இவர்களில் பலர் ஒமிக்ரோன் திரிபுத் தொற்றாளர்களாக இருப்பது பாரதூரமான விடயமாகும்- என்றார். (எ-இ)

---

### தடுப்புக்களில்...

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தமிழ் அரசியல் கைதிகள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தற்போது முயற்சிகளை எடுத்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலத்துக்கு இந்தப் பிரச்சினையை இழுத்தடிக்க அரசு தயாராக இல்லை. அதனால் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் நடந்த தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக நாம் எமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம். இவ்வாறான சில சம்பவங்கள் இடம்பெறுவதால் ஒட்டுமொத்த சிறைச்சாலைக் கட்டமைப்பையும் தவறாகச் சித்திரிக்க முடியாது. அனைத்து நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்க அனைவருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (எ-இ)

### பூஸ்டர்...

னிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு உற்சவ முன்னாயத்தக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து சுமார் 10 ஆயிரம் பேர் கச்சதீவு உற்சவத்தில் பங்கேற்பதற்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது. கொரோனாப் பேரிடர் நிலைமை காரணமாக இந்தியப் பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 500 பேர் வரையிலேயே கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க அனுமதிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையும், மார்ச் மாதம் திருவிழா காலப் பகுதியில் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சுற்றறிக்கைக்கு ஏற்ப மாற்றப்படவும் வாய்ப்புள்ளது.

அத்துடன் உற்சவத்தில் பங்கேற்பவர்கள் அனைவரும் பூஸ்டர் டோஸும் ஏற்றியிருக்க வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-5)

### மஹிந்த...

பிரதானியாகக் கடமையாற்றிய உதித் லொக்குபண்டாரவிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் தெரியவருகின்றது.

பிரதமரின் வங்கிக் கணக்கில் இருந்து 35 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பணத் தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாகப் பிரதமரின் உறவினர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அரச வங்கி ஒன்றில் இருந்த பிரதமரின் வங்கிக் கணக்குக்கு வழங்கப்பட்ட தன்னியக்க பணப் பரிமாற்ற அட்டையைப் பயன்படுத்தி பணம் மீளப் பெறப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அந்த வங்கிக் கணக்கில் இருந்த பணம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் என்று பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

வங்கிக் கணக்கில் உள்ள நிலுவைத் தொகை தொடர்பாக சந்தேகம் எழுந்ததை அடுத்து கணக்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக அந்த வங்கிக் கணக்கில் இருந்து பணம் தொடர்ந்து மீளப் பெறப்பட்டமை அதில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அந்த வங்கிக் கணக்குக்காக வழங்கப்பட்ட தன்னியக்கப் பணப் பரிமாற்ற அட்டை, உதித் லொக்கு பண்டாரவிடமே இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

உதித் லொக்கு பண்டார, முன்னாள் சபாநாயகர் வீ.ஜே.எம்.லொக்குபண்டாரவின் மகனாவார். (எ-இ)

### தமிழக...

காவற்றுறை நீதிமன்றால் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் இந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், ஊர்காவற்றுறை நீதிமன்றில் தமிழக [illegible] நேற்றுக் குற்ற[illegible] செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 55 மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழக மீனவர்கள் 55 பேருக்கும் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனை விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

அதேவேளை ஒரு படகின் உரிமையாளரும் படகில் பயணித்த நிலையில், எல்லை தாண்டுவதைத் தடுக்கத் தவறியமையால் குறித்த படகு அரசுடமையாக்கப்பட்டது. இந்த வழக்குடன் தொடர்புடைய ஏனைய 7 படகுகள் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

### பிரதமருக்கு...

சிறிய சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டது என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

நீண்டகாலமாகப் பிரதமரின் பிரத்தியேக மருத்துவராகச் செயற்படும், மருத்துவர் நரேந்திர பிந் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் மருத்துவர் நரேந்தி பிந், இலங்கைக்கு வரும் போது இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள நீண்ட காலத்துக்கு முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது என்றும், அதற்கமையே இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

அதேநேரம், மஹிந்தவின் முள்ளந்தண்டில் சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ள பிரதமர் அலுவலகம், பிரதமர் தற்போது நலமுடன் உள்ளார் என்றும் தெரிவித்துள்ளது. (எ-இ)

### கள்ளமணல்...

துப்பாக்கிச்சூடு நடத்தி மடக்கிப் பிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலியில் நேற்று நடந்துள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை நடைபெறுகின்றது என்று இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மணல் ஏற்றியவாறு பயணித்த உழவு இயந்திரம் ஒன்று இராணுவத்தினரின் சமிக்ஞையை மீறிப் பயணித்த நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

உழவியந்திரத்தைச் செலுத்திச் சென்ற 24 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மேல[illegible] நடவடிக்கைக்காக கொடிகாமம் [illegible]டம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும், கைப்பற்றப்பட்ட உழவியந்திரமும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125,20,159)

### திடீர்...

(வயது-4) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை சிறுமிக்குத் திடீர் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டதை அடுத்து, சங்கானை பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சிறுமியின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. (எ-27)

### பலாலியில்...

பாவனையற்ற காணி ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று உள்ளது என்று கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, நீதிமன்ற அனுமதி பெற்று கைக்குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பலாலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-125)

### நாளைவரை...

நாயக்க தெரிவித்துள்ளார். நாளைவரையான மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்றும், இலங்கை மின்சார சபையால் மின்வெட்டுத் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனையை மீண்டும் நாளை பரிசீலிக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போதுள்ள எரிபொருள்களின் இருப்பு, அவற்றை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கக் கூடிய திகதிகள் பற்றிய விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மாத இறுதிக்குள் இலங்கைக்கு மசகு எண்ணெய் கையிருப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சீரமைப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 3 ஆம் அலகின் மூலம் இந்த மாத இறுதிக்குள் மீண்டும் மின் உற்பத்தியை ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால் தடையற்ற மின்சாரத்தை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவப் பயிற்சி

கொடிகாமம், ஜன. 26

ஸ்ரீலங்கா யுனைட்ஸ் கழக உறுப்பினர்களுக்குரிய தலைமைத்துவப் பயிற்சிகள் சர்வோதய காரியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதற்கான நிதி அனுசரணையினை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் வழங்கியது. பயிற்சியின்போது தலைமைத்துவம், தலைமைத்துவத்தை ஏற்கும் போது எதிர்கொள்ளும் சவால்கள், வினைத்திறனான மனிதர்களின் பண்புகள், ஆளுமைச் சோதனைகள் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (வ-159)

# சுற்றுலாவிகளின் வருகை இலங்கையில் அதிகரிப்பு



கொழும்பு, ஜன. 26

இலங்கையில் தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உலகில் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமான 5நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

அதனடிப்படையில் சுற்றுலாப் பயணி களின் வருகையும் அதிகரித்துள்ளது.

இது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெரும் பின்புலமாகும். கொரோனாத் தடுப்பூசி விடயத்திலும் இலங்கை முன்னணியில் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# நோர்வேயிடம் தலிபான்கள் உணவு தருமாறு கோரிக்கை

காபூல், ஜன. 26

ஆப்கானிஸ்தானில் கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக நோர்வேயிடம் உதவி கேட்டுள்ளது தலிபான் அமைப்பு.

சரியான பொருளாதாரத் திட்டமிடல் இல்லாததால் ஆப்கானிஸ்தானில் தற்போது கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள்களுக்கு கடும் பற்றாக் குறை நிலவுகிறது.

இதனால் மக்கள் பசியும், பட்டினியுமாக இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகளிடம் தலிபான்கள் கையேந்துகிறார்கள் என்றாலும் உணவுப்பற்றாக் குறையை இன்னமும் தீர்க்க இயலவில்லை. அடுத்த மாதம் இந்தியா கோதுமையை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிவைக்க முடிவுசெய்துள்ளது.

இதற்கிடையே தங்களுக்கு உதவுமாறு நோர்வேயிடம் தலிபான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)



# இரு பயனாளிகளுக்கு உற்பத்தி இயந்திரங்கள்



சாவகச்சேரி, ஜன.26

வாழைத் தண்டிலிருந்து உற்பத்திப் பொருள்கள் செய்யும் இயந்திரங்கள், இரண்டு பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

வேள்ட் விஷன் நிறுவனத்தால், பின்லா மற்றும் செவனத அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டத்தின் கீழ், வாழைத் தண்டிலிருந்து பொருள்கள் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், பின்லா மற்றும் செவனத அமைப்புகளின் பன்னாட்டு இணைப்பாளர் ஜோஜி ஆகியோர் இயந்திரங் களைக் கையளித்தனர். (ம-4-9)

# யால சரணாலயத்தில் யானை துன்புறுத்தல்

## காணொலியால் பரபரப்பு

கொழும்பு, ஜன. 26

யால சரணாலயத்தில் யானையொன்றை வாகன சாரதிகள் சிலர் துன்புறுத்தும் காணொலியொன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகளுடன் ஜீப்கள் பயணித்துக் கொண்டிருந்த போது, பாதையில் தென்பட்ட யானையை சாரதிகள் துன்புறுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. யானையைக் கண்ட ஜீப்களின் சாரதிகள் பட்டாசுகளை கொளுத்தி வெடிக்க வைக்கும் சம்பவங்கள் அந்தக் காணொலியில் பதிவாகியுள்ளன. (ம-4-இ)

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை
மல்லாகம் கொக்குவில்
புதிய கல்வியாண்டு – 2022 ஆரம்பம்
தரம் 06 – O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை
எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல
English medium வகுப்புக்கள் ஆரம்பம்
04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05
வரையான சித்தயோக நன்நாளன்று
அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து
பெற்றுக்கொள்ளமுடியும்.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்
(cs.1210)

கடை வாடகைக்கு உண்டு
Clock Tower Road, Jaffna
077 242 7004, 077 210 0909

A/L - வரலாறு - 2021
இம்முறை க.பொ.த. உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
இடம்: D.M.I ஆரியகுளம். யாழ்ப்பாணம்.
காலம்:
27.01.2022 - இலங்கை வரலாறு
28.01.2022 - ஐரோப்பிய வரலாறு
29.01.2022 - இந்திய வரலாறு
30.01.2022 - நவீன உலக வரலாறு
நேரம்
பி.ப 1.00 - 5.00 மணிவரை
வளவாளர்:
தேசிய ரீதியில் பிரசித்திபெற்ற உங்கள் ஆசான்
M.பத்மன் B.A(Hons)History
P.G.D.E, Dip. in Psy, M.A Chistory
"வெற்றிக்காக இணைவோம்"

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் அராலி வீதியில் 2ம் ஒழுங்கைப் பகுதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (12 அடி பாதையுடன் நெற்பரப்புடன் கூடிய காணி) விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம். யாழ். நகரிலிருந்து 1 1/2 km தூரம்.
தொடர்புகளுக்கு: 074 0089 086, 077 883 4749, 077 862 6251

துரித பொதிகள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 12 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)
077 65 85 999

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 6 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.
1 நிலப்பரப்பின் விலை 3.5 லட்சம் (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்.
077 2880152

உடனடி வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கும் CityTex புடைவையகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
முன்அனுபவம் விரும்பத்தக்கது.
வயது எல்லை - 18 - 30
தொடர்பு
076 - 666 3574

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 814 7389, 077 614 7333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.